# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணாசாலை, கிண்டி, சென்னை– 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல்முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை: மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 269/மா/2022**

**நாள்: 23.03.2023**

திரு.கோ.கார்த்திகேயன்,
ஆவடி மாநகராட்சி, ஆவடி. – முறையீட்டு மனுதாரர்

ஆணையர், ஆவடி மாநகராட்சி,
ஆவடி – எதிர்மனுதாரர்

சென்னை, ஆவடி, T.N.H.B. பிளாட் நெ.1969 என்ற முகவரியில் வசிக்கும் திரு. கோ.கார்த்திகேயன் என்பவரின் 16.12.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.12.2022–ல் பெறப்பட்டு 269/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை, ஆவடி, T.N.H.B. பிளாட் நெ.1969 என்ற முகவரியில் வசிக்கும் திரு. கோ.கார்த்திகேயன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 16.12.2022 நாளிட்ட தனது மனுவில்:

" நான் 04.03.2022 அன்று ஆவடி மாநகராட்சியில் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் 01.04.2021 முதல் 31.12.2021 வரை கொரோனா தொற்றாளர்களுக்கு, பராமரிப்பு மையங்களில் தினமும் (3 வேளையும்) வழங்கப்பட்ட உணவுகள், அதற்காக செலவிடப்பட்ட தொகை, அந்த உணவுக்காக நிறுவனம் வழங்கிய ரசீதுகளின் நகல்களை கோரினேன். அதற்கு ஆவடி மாநகராட்சி மேல் முறையீட்டு அலுவலர்/சுகாதார அலுவலர் (பொ) அவர்கள் உணவுக்காக வழங்கிய தொகைக்கான 5 ரசீதுகளின் நகல்களை தனது கடிதத்துடன் இணைத்து அனுப்பினார். அந்த ரசீது " Lakshmi Catering Service, Res. No.9, 7th. Street, Kamaraj Nagar, Avadi, Chennai – 600 071" என்ற லெட்டர் பேடில், கீழ்கண்டபடி தேதி வாரியாக டைப் செய்யப்பட்ட ரசீது வழங்கப்பட்டிருந்தன.

| வரிசை எண் | நாள் | வழங்கிய தொகை |
|---|---|---|
| 1. | 25.05.2021 | ரூ. 9,18,750 |
| 2. | 14.06.2021 | ரூ. 9,22,250 |
| 3. | 02.07.2021 | ரூ. 5,69,250 |
| 4, | 19.07.2021 | ரூ. 4,22,250 |
| 5. | 22.07.2021 | ரூ.19,13,750 |
| | மொத்தம் | ரூ.47,46,250 |

ஆனால் செலவிடப்பட்ட தொகை ரூ.28,32,500/– என தெரிவிக்கப்பட்டதற்கும் இந்த ரசீதுகளின் கூட்டுத்தொகைக்கும் மாறுபாடுள்ளது. இந்நிறுவனம் லெட்டர்பேடில் குறிப்பிட்ட முகவரியில் விசாரித்ததில் அப்படி ஒரு நிறுவனம் செயல்படவே இல்லை என தெரிய வந்தது. அந்த நிறுவனம் சேவை மற்றும் மதிப்பு கூட்டு கவுன்சிலில் பதிவு செய்த எண்ணையோ, உணவு பாதுகாப்பு பிரிவில் (FSSAI) பதிவு செய்த எண்ணையோ, மேலும் சிறுதொழில் செய்ய MSME ல் பதிவு செய்த எண்ணையோ குறிப்பிடவில்லை. ஆகவே ஆவடி மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு கொரோனா காலகட்டத்தில் அவசர அவசியத்தை கருதி செலவிடப்படும் தொகைக்கு முறையாக தணிக்கை தேவையில்லை என்ற காரணத்தைக்கொண்டு இவ்வாறு போலி நிறுவனங்கள் பெயரில் பல்வேறு ஊழல்களை செய்துள்ளது. ஆவடியில் FSSAI, MSME, மற்றும் GST கவுன்சிலில் பதிந்து முறையாக செயல்படும் உணவு நிறுவனங்கள் பல உள்ளபோது தகுதியற்ற ஒரு போலி நிறுவனத்திலிருந்து உணவுகளை பெற்று கொரோனா காலத்தில் ஆவடி மாநகராட்சியில் நடந்த அனைத்து பணிகளையும் ஆய்வு செய்தால் மேலும் பல ஊழல்கள் வெளிச்சத்திற்கு வரும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இத்துடன் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல்கள், மாமன்ற தீர்மானம் எண்.1109, நாள் 30.04.2021 நகல் இணைத்துள்ளேன்" என தெரிவித்துள்ளார்.

2) இம்மனு தொடர்பாக இம்முறைமன்ற நடுவ 11.01.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஆவடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது.

3) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 07.03.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 22.02.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) மனுதாரர் 07.03.2023 அன்றைய நேரடி விசாரணையில் இம்முறைமன்றத்தில் ஆஜராகி பின்வருமாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

" ஆவடி மாநகராட்சியில் கொரோனா தொற்று காலத்தில் பராமரிப்பு மையங்களில் தங்கியிருந்த கொரோனா தொற்றாளர்களுக்கு உணவு வழங்கியதற்கான தொகையைப் பற்றி தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் என்னால் கேட்டு பெறப்பட்டது. அவ்வாறு வழங்கிய ரசீதுகளில் கொரோனா பெருந்தொற்று காலத்தில் மொத்தம் செலவிடப்பட்டதாக எனக்கு அளிக்கப்பட்ட ரசீதுகளின் நகல்களின் மூலம் தெரிகிறது. ஆனால் எனக்கு அளிக்கப்பட்ட RTI பதிலில் செலவிடப்பட்ட தொகை ரூபாய் 28,32,500/– என தெரிவிக்கப்பட்டு, மேற்கண்ட தொகைக்கு முரணாக 47,46,250/– ரூபாய்க்கான ரசீதுகளின் நகல்கள் எனக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் எது உண்மையான தொகை என தெரியவில்லை. மேலும் மேற்கண்ட தொகை, ஆவடி காமராஜர் நகர் 7வது தெருவில் கதவு எண் 2ல் இயங்கி வரும் லட்சுமி கேட்டரிங் சர்வீஸ் மூலம் கோவிட் பாதுகாப்பு மையத்தில் சிகிச்சை பெற்றவர்களுக்கு உணவு அளித்த வகையில் வழங்கப்பட்டது என மாநகராட்சியால் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், மேற்கண்ட லட்சுமி கேட்டரிங் சர்வீஸ் பெயரில் அங்கு எவ்வித சமையல் கூடமும் இயங்கவில்லை. மாநகராட்சியால் தெரிவிக்கப்பட்டுள்ள முகவரியில் வீடு மட்டுமே

உள்ளது. இவ்வாறு கொரோனா பெருந்தொற்று காலத்தில் இல்லாத போலியான சமையல் கூடத்திற்கு பில் தொகை வழங்கியது தொடர்பாக தீவிர விசாரணை நடத்திட ஆவன செய்யுமாறும், மேற்கண்ட பில் தொகையின் உண்மைத்தன்மையை ஆராயவும் ஆவன செய்யுமாறு, இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) ஆவடி மாநகராட்சி சுகாதார அலுவலர்கள் 07.03.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளனர் :

" ஆவடி மாநகராட்சி கொரோனா பெருந்தொற்று காலத்தில் கொரோனா பாதுகாப்பு மையத்தில் வைக்கப்பட்டிருந்த கொரோனா தொற்றாளர்களுக்கு உணவு அளித்த வகையில் வழங்க வேண்டிய தொகை ரூபாய் 47,46,250/– என மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட விவரத்தில் தவறாக தெரிவிக்கப்பட்டுவிட்டது. ஆனால், கோப்புகளின் அடிப்படையில் ரூபாய் 28,32,500/– மட்டுமே ஒப்பந்ததாரருக்கு அளிக்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மனுதாரர் தனது மனுவில் தெரிவித்தவாறு ஆவடி காமராஜர் நகர் 7வது தெருவில் கதவு எண் 2ல் லட்சுமி கேட்டரிங் என்ற பெயரில் சமையல் கூடம் ஏதும் இயங்கவில்லை. மாறாக மேற்கண்ட முகவரியில் வீடு மட்டுமே அமைந்துள்ளது என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் ஆவடி மாநகராட்சி ஆணையரின் 07.03.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

6) ஆவடி மாநகராட்சி ஆணையர் தனது 07.03.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" ஆவடி மாநகராட்சிக்கு, மனுதாரர் கடந்த 04.03.2022 அன்று தகவல் உரிமை கோரும் சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட வினாக்களுக்கு 15.03.2022 அன்று மேல் முறையீட்டு அலுவலர் மற்றும் சுகாதார அலுவலர்(பொ) பதில் அளித்துள்ளார்.

ஆவடி மாநகராட்சி, 15.03.2022 அன்று மனுதாரருக்கு கொடுத்திருந்த பதிலில் லட்சுமி கேட்டரிங் சர்வீஸ்க்கான billகளின்படி கோவிட் கேர் சென்டரில் சிகிச்சை பெற்றவர்களுக்கு உணவு அளித்த வகையில் வழங்கவேண்டிய தொகை ரூ.47,46,250/– என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதே சமயம் கோவிட் கேர் சென்டருக்கு 03.05.2021 முதல் 17.07.2021 வரை உணவு செலவுத்தொகையாக வழங்கிய தொகை கோப்புகளின் அடிப்படையில் ரூ.28,32,500/– மட்டுமே என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

கோப்புகளின் அடிப்படையில் மாநகராட்சி சார்பில் ஒப்பந்ததாரருக்கு அளிக்கப்பட்ட தொகை விபரம் பின்வருமாறு:

| வரிசை எண் | வழங்கப்பட்ட தேதி | வழங்கிய தொகை |
|---|---|---|
| 1. | 09.06.2021 | ரூ. 9,18,750/– |
| 2. | 31.08.2021 | ரூ.6,15,200/– |
| 3. | 13.09.2021 | ரூ.7,00,000/– |
| 4. | 21.10.2021 | ரூ.5,98,550/– |
| | மொத்தம் | ரூ.28,32,500/– |

ஒரே காலகட்டத்தினை குறிக்கும் இரண்டு billகள் லட்சுமி கேட்டரிங் சர்வீஸ் நிறுவனத்திடமிருந்து மாநகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த இரண்டு பில்களையும் சேர்த்ததினால் தான் கூடுதல் தொகையாக மாறியுள்ளது.

ஒரே காலகட்டத்தினை குறிக்கும் இரண்டு பில்களின் விவரம் பின்வருமாறு:-

i) 14.06.2021ம் தேதி லட்சுமி கேட்டரிங் சர்வீஸ் நிறுவனத்தால் கொடுக்கப்பட்ட பில் (03.05.2021 முதல் 13.06.2021 தேதி வரை உணவு வழங்கியது)
22.07.2021ம் தேதி லட்சுமி கேட்டரிங் சர்வீஸ் நிறுவனத்தால் கொடுக்கப்பட்ட பில் (03.05.2021, 04.05.2021, 05.05.2021 மற்றும் 24.05.2021 முதல் 17.07.2021 வரை உணவு வழங்கியது).

மேற்குறிப்பிட்டுள்ள இரு billகளிலும் 03.05.2021 முதல் 05.05.2021 வரை மற்றும் 24.05.2021 முதல் 13.06.2021 வரையிலான தேதிகள் இரண்டு முறை குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஆவடி மாநகராட்சி, சரியான தேதிகளுக்குத்தான் செய்த நாட்களுக்குரிய தொகை வழங்கப்பட்டுள்ளது.(வழங்கிய தொகை ரூ.28,32,500/-) ஆவடி மாநகராட்சியானது 06.05.2021 முதல் 23.05.2021 வரையிலான காலகட்டத்திற்கு ரூ.9,18,750/-யும், 03.05.2021, 04.05.2021, 05.05.2021 மற்றும் 24.05.2021 முதல் 17.07.2021 வரையிலான காலகட்டத்திற்கும் ரூ.6,15,200/-, ரூ.7,00,000/-, ரூ.5,98,500/- என்ற 3 தவணைகளிலும் வழங்கப்பட்டுள்ளது. ஆக வழங்கப்பட்ட மொத்த தொகை ரூ.28,32,500/- ஆகும்.

ii) மேற்குறிப்பிட்ட லட்சுமி கேட்டரிங் சர்வீஸ் என்ற நிறுவனம் எண்.2, 7வது தெரு, காமராஜர் நகர், ஆவடி என்ற முகவரியில் இயங்கவில்லை. அந்த முகவரிக்கு நேரில் சென்று ஆய்வு செய்தவகையில் அங்கு குடியிருக்கும் வீடு மட்டுமே அமைந்துள்ளது. சமையற்கூடம் ஏதும் இயங்கவில்லை. அருகில் உள்ளவர்களிடம் விசாரித்தவரையில் அங்கு கேட்டரிங் சர்வீஸ் தொடர்பான பணிகள் ஏதும் நடக்கவில்லை.

iii) லட்சுமி கேட்டரிங் சர்வீஸ் நிறுவனம் சேவை மற்றும் மதிப்பு கூட்டு கவுன்லில் பதிவு செய்த எண்ணையோ, தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறையில் (FSSAI) பதிவு செய்த எண்ணையோ, சிறு தொழில் செய்ய MSMEல் பதிவு செய்த எண்ணையோ குறிப்பிடவில்லை.

iv)மேற்குறிப்பிட்ட Covid Care Centre-ல் தங்கி உணவு உண்ட நபர்களின் எண்ணிக்கைக்கு திரு.அப்துல் ஜாபர், துப்புரவு அலுவலர் (பொ) சான்றளித்துள்ளார். சான்றளிக்கப்பட்ட பட்டியலை சரிபார்த்து லட்சுமி கேட்டரிங் சர்வீஸ் நிறுவனத்தால் வழங்கப்பட்ட billகளுக்கான தொகையினை அப்போதைய ஆணையர் திரு.நாராயணன் அவர்கள் வழங்கியுள்ளார். எனினும் சிகிச்சை பெற்ற நபர்களின் எண்ணிக்கையினை உறுதி செய்யும் விதமான ஆதாரங்கள் கோப்புகளில் இல்லை.

v) கோவிட் கேர் சென்டரினைப்பொருத்தமட்டில் பராமரிப்பு, உணவு வழங்குதல் பணியினை உள்ளாட்சி அமைப்பு மேற்கொண்டு இருந்தாலும், அங்கு தங்கியிருந்த நோயாளிகளின் சிகிச்சை, admission. Discharge செய்தல் அந்த Covid Care Centreன் inchargeஆக இருந்த Medical 'Officerன் பொறுப்பாகும். ஆனால் சிகிச்சை பெற்ற நபர்களின் எண்ணிக்கையினை உறுதி செய்ய, நோயாளிகள் தங்கியிருந்த Covid Care Centreயினை கவனித்து வந்த பொறுப்பு Medical Officer உணவு உண்டவர்களின் பட்டியலில் கையொப்பமிடவில்லை. Covid Care Centre-ல் சிகிச்சை

பெற்றவர்களின் பட்டியல் கோப்புகளில் இல்லை என்பதால், உணவு சாப்பிட்டவர்களின் பட்டியலை சரிபார்க்க இயலவில்லை என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் ஆவடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் ஆவடி மாநகராட்சி சுகாதார அலுவலர்களின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறியமுடிகிறது.

மனுதாரர் திரு.கோ.கார்த்திகேயன் என்பவர் 01.04.2021 முதல் 31.12.2021 வரை கொரோனா பாதித்தவர்களுக்கு ஆவடி மாநகராட்சியின் பராமரிப்பு மையங்களில் வழங்கப்பட்ட உணவுகளுக்கு செலவிடப்பட்ட தொகையில் முறைகேடு நடைபெற்றுள்ளதாகவும், எனவே அது குறித்து தக்க நடவடிக்கை எடுக்க இம்முறை மன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

மேற்சொன்ன காலகட்டத்தில் ஆவடி மாநகராட்சியின் பராமரிப்பு மையத்தில் வழங்கப்பட்ட உணவு தொடர்பாக கீழ்க்கண்ட 5 ரசீதுகள் மாநகராட்சியால் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது.

| வரிசை எண் | நாள் | வழங்கிய தொகை |
|---|---|---|
| 1. | 25.05.2021 | ரூ. 9,18,750 |
| 2. | 14.06.2021 | ரூ. 9,22,250 |
| 3. | 02.07.2021 | ரூ. 5,69,250 |
| 4, | 19.07.2021 | ரூ. 4,22,250 |
| 5. | 22.07.2021 | ரூ.19,13,750 |
| | மொத்தம் | ரூ.47,46,250 |

மேலும் ரூ.28,32,500/- செலவிடப்பட்டதாக தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளது . மாநகராட்சி சுகாதார அலுவலர்களின் வாக்குமூலத்தில் உணவு அளித்த வகையில் வழங்க வேண்டிய தொகை ரூபாய் 47,46,250/- என மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட விவரத்தில் தவறாக தெரிவிக்கப்பட்டுவிட்டது என தெரிவித்துள்ளனர். மனுதாரருக்கு தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் கீழ் தவறாக தகவல் அளிக்கப்பட்டது என்ற வாதம் ஏற்றுக்கொள்ள இயலாது. ஒரே காலகட்டத்தினை குறிக்கும் இரண்டு பட்டியல்கள் லட்சுமி கேட்டரிங் சர்வீஸ் நிறுவனத்திடமிருந்து மாநகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த இரண்டு பட்டியலையும் சேர்த்ததினால்தான் கூடுதல் தொகையாக மாறியுள்ளது என மாநகராட்சி ஆணையரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

30.04.2021 நாளிட்ட மாமன்ற தீர்மானத்தில் ரூ.56.25 இலட்சத்தில் பணியை மேற்கொள்ள லட்சுமி கேட்டரிங் நிறுவனத்திற்கு தமிழ்நாடு மாநகராட்சி சட்டம் 1981ன்படி 13ன் கீழ் செலவினை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆவடி காமராஜர் நகர் 7வது தெருவில் கதவு எண் 2ல் லட்சுமி கேட்டரிங் என்ற பெயரில் சமையல் கூடம் ஏதும் அங்கு இயங்கவில்லை. மாறாக மேற்கண்ட முகவரியில் வீடு மட்டுமே அமைந்துள்ளது. அந்நிறுவனம் சேவை மற்றும் மதிப்பு கூட்டு கவுன்சிலிங்கில் (GST) பதிவு செய்த எண்ணையோ, தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறையில் (FSSI) பதிவு செய்த எண்ணையோ, சிறுதொழில் செய்ய MSMEல் பதிவு செய்த

எண்ணையோ குறிப்பிடவில்லை. மேற்குறிப்பிட்ட Covid Care Centreல் தங்கி உணவு சாப்பிட்டவர்களின் எண்ணிக்கைக்கு திரு.அப்துல் ஜாபர், துப்புரவு அலுவலர்(பொ) சான்றளித்துள்ளார். சான்றளிக்கப்பட்ட பட்டியலை சரிபார்த்து லட்சுமி கேட்டரிங் சர்வீஸ் நிறுவனத்திற்கு பட்டியல் தொகையினை அப்போதைய ஆணையர் திரு.நாராயணன் அவர்கள் வழங்கியுள்ளார். எனினும் சிகிச்சை பெற்ற நபர்களின் எண்ணிக்கையினை உறுதி செய்யும் விதமான ஆதாரங்கள் கோப்புகளில் இல்லை. மேலும் மேற்சொன்ன Covid Care Centre-ஐ பொறுத்தவரையில் பராமரிப்பு, உணவு வழங்குதல் பணியினை உள்ளாட்சி அமைப்பு மேற்கொண்டு இருந்தாலும் அங்கு தங்கியிருந்த நோயாளிகளின் சிகிச்சை admission, discharge செய்தல் ஆகியவை அந்த covid care centreன் பொறுப்பு அலுவலரான மருத்துவ அலுவலர்தான் பொறுப்பாகும். ஆனால் அந்த அலுவலர் உணவு சாப்பிட்டவர்களின் பட்டியலில் கையொப்பமிடவில்லை. Covid Care Centreல் சிகிச்சை பெற்றவர்களின் பட்டியல் கோப்புகளில் இல்லை என்பதால் உணவு சாப்பிட்டவர்களின் பட்டியலை சரிபார்க்க இயலவில்லை என ஆணையர் அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது. Covid Care Centre-ன் பொறுப்பு அலுவலரான மருத்துவ அலுவலரிடம் சான்று பெறாமல், எந்த பொறுப்பில் (capacity) இருந்து துப்புரவு அலுவலர்(பொ) சான்றளித்தார் என்பது சந்தேகத்திற்கு இடம் அளிப்பதாக இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. மேலும், சிகிச்சைக்கு நோயாளிகள் சேரும்போது admission card, O P number போன்றவைகள் பதிவு செய்து பின்னர் சிகிச்சை முடிந்து திரும்பும் நோயாளிகளுக்கு discharge summary போன்றவைகள் கணினியில் பதிவு செய்யப்பட்டிருக்கும் சூழ்நிலையில், சிகிச்சை பெற்ற நோயாளிகள் எண்ணிக்கை அடங்கிய கோப்பு இல்லை என்பது இம்முறைமன்றத்தின் சந்தேகத்தினை ஊர்ஜிதம் செய்வதாக உள்ளது என இம்முறைமன்ற நடுவம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. மேலும், ஆவடி மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.1108 நாள் 30.04.2021–ல் இந்நேர்வு தொடர்பாக தோராய செலவு ரூ.56.25 இலட்சத்திற்கு விலைப்புள்ளி பெறவும், வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Lakshmi Catering Service, No.2, Kamarajar Nagar, 7th. Street, Avadi, Chennai -71 என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியமைக்கும் அதற்கான தோராய செலவு ரூ.56.25 இலட்சத்தில் பணியை தமிழ்நாடு மாநகராட்சி சட்டம் 1981–ன்படி 13ன் கீழ் செலவினை மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கியமைக்கும் மன்றத்தின்அனுமதி வேண்டப்பட்டுள்ளது.

13. Powers of Commissioner and other Officers. -

(1) Subject whenever it is hereinafter expressly directed, to the sanction of the Council or the Standing Committee, as the case may be, and subject to all other restrictions, limitation and conditions as may be prescribed or as are hereinafter imposed in this Act, the executive power for the purpose of carrying out the provisions of this Act shall be vested in the Commissioner.

மேற்கண்ட பிரிவிற்கு பதிலாக பின்வரும் பிரிவின் கீழ் அனுமதி கோரப்பட்டிருக்க வேண்டும்.

15.Extra ordinary powers of Commissioner. -

The Commissioner may, in case of emergency, direct the execution of any work or the doing of any act which would ordinarily require the sanction of any municipal authority and the immediate execution or doing of which is, in his opinion, necessary for the service or safety of the public and may direct that the expense of executing the work or of doing the act shall be paid from the municipal fund.

அடிப்படையிலேயே தமிழ்நாடு மாநகராட்சி சட்டம் 1981ன்படி 13ன் கீழ் மேற்கண்ட செலவினத்திற்கு அனுமதி வேண்டப்பட்டது தவறு என்று இம்முறைமன்ற நடுவம் சுட்டிக்காட்ட

விரும்புகிறது. தவறான சட்டவிதியின் கீழ் அனுமதி அளித்தது மிகவும் வன்மையாக கண்டிக்கத்தக்கது ஆகும்.

மேலும் உணவு வழங்கும் கேட்டரிங் நடத்துபவர்கள் எவ்வாறு அவர்களுடைய நிறுவனத்தை பதிவு செய்ய வேண்டும் என்றும் உரிமம் எவ்வாறு பெற வேண்டும் என்று Food Safety and Standards (Licensing and Registration of Food Business) Regulations 2011-ல் (பிரிவு 2. 1. 2–ல்) தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

8) இந்நேர்வில், மனுதாரரின் மனு, வாக்குமூலம், ஆவடி மாநகராட்சியின் சுகாதார அலுவலரின்(பொ) வாக்குமூலம், ஆவடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை அடிப்படையிலும், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் 2014ல் உள்ள கீழ் குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவுகளின்படியும், இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

7.The Ombudsman shall perform all or any of the following functions, namely:-

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) pass an order on the proved allegation in the following manner, namely:-

(a) Where the irregularity involves a criminal offence committed by a public servant, the matter shall be referred to the appropriate investigating agency for necessary action;

(b) Where the irregularity involves loss of the fund of the local body, order recovery of such loss from those who are responsible for such irregularity:

(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules.

பிரிவு 11. (1 ) If, after an enquiry, the Ombudsman finds that there is a prima facie case against a public servant involving a criminal offence, the Ombudsman may refer the complaint and the findings with recommendation to the appropriate investigating agency.

(2) The appropriate investigating agency, on completion of investigation, shall initiate prosecution after obtaining sanction from the competent authority.

12. (1) The Ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner, namely:-

( c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body.

இந்த முறைகேடு தொடர்புடைய காலகட்டத்தில் மனுதாரரால் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்ட முறைகேடுகள் குறித்து உள்ளாட்சி நிதித்தணிக்கை சிறப்பு ஆய்வு மேற்கொண்டு அறிக்கையினை 3 மாத காலத்திற்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கும் மேல்நடவடிக்கை எடுக்கும்

பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கும் அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் அவ்வறிக்கையில் ஏதேனும் முறைகேடு தொடர்பாக நடைபெற்றிருப்பின் அந்த முறைகேட்டிற்கு காரணமான சம்மந்தப்பட்ட ஆவடி மாநகராட்சி ஆணையர் மற்றும் அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் அவ்வாறே ஆணையிடுகிறது.

2023-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 23-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு. கோ.கார்த்திகேயன்,
பிளாட் எண்.1969 TNHB
ஆவடி, சென்னை – 600 054.

2)ஆணையர்,
ஆவடி மாநகராட்சி, ஆவடி.

3)நகராட்சிநிர்வாகஇயக்குநர்,
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை– 600 028.

4)இயக்குநர்,
உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை,
571, அண்ணா சாலை, நந்தனம்,
சென்னை – 600 035.

5)இணைஇயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை– 600 028.

நகல்.
மாண்புமிகுமுறைமன்றநடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்